முழுப் பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2025

72 – தமிழ்

புள்ளியிடும் திட்டம்











இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை -2025
72- தமிழ்
புள்ளி வழங்கும் திட்டம்

பத்திரம் I

பகுதி I

கட்டாய வினாக்கள்

வினா 01		24 புள்ளிகள்
வினா 02		16 புள்ளிகள்

பகுதி II

எவையேனும் மூன்று வினாக்கள்	20X3	60 புள்ளிகள்
		100 புள்ளிகள்

பத்திரம் II

பகுதி I

கட்டாய வினாக்கள்

வினா 01		20 புள்ளிகள்
வினா 02		25 புள்ளிகள்
வினா 03		25 புள்ளிகள்

பகுதி II

எவையேனும் இரண்டு வினாக்கள்	15X2	30 புள்ளிகள்
	மொத்தம்	100 புள்ளிகள்

இறுதிப் புள்ளி கணித்தல்

பத்திரம் I	100 புள்ளிகள்
பத்திரம் II	100 புள்ளிகள்
மொத்தம்	200 புள்ளிகள்

இறுதிப் புள்ளி $\left(\frac{100+100}{2}\right)$ = 100 புள்ளிகள்

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை -2025

72- தமிழ் - I

புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஆறு வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

பகுதி I

01. அ. i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
ஆ. i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
(12 + 12 = 24 புள்ளிகள்)

02. (அ) அல்லது (ஆ)
i. 04 புள்ளிகள் ii. 04 புள்ளிகள் iii. 04 புள்ளிகள்
iv. 04 புள்ளிகள்
(04 x 04 = 16 புள்ளிகள்)

பகுதி II

03. அ. 04 புள்ளிகள் ஆ. 06 புள்ளிகள் இ.04 புள்ளிகள்
ஈ. 04 புள்ளிகள்
(04+ 06+06+ 04 = 20 புள்ளிகள்)

04. அ. 04 புள்ளிகள் ஆ. 04 புள்ளிகள் இ.04 புள்ளிகள்
ஈ. 04 புள்ளிகள் உ. 04 புள்ளிகள்
(04 x 05 = 20 புள்ளிகள்)

05. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ.05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
(05x 04 = 20 புள்ளிகள்)

06. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ.05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
(05x 04 = 20 புள்ளிகள்)

07. அ. 05 புள்ளிகள் ஆ. 05 புள்ளிகள் இ.05 புள்ளிகள்
ஈ. 05 புள்ளிகள்
(05x 04 = 20 புள்ளிகள்)

08. ஆ.
ஆ.
இ.
ஈ.
உ.
} பரீட்சார்த்திகளின் இரண்டு தெரிவுகளுக்கு தலா 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

(10 x 02 = 20 புள்ளிகள்)

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - சில பொது நடைமுறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

உதாரணம் - வினா இல 03

(i) ..... ✓ △ 4/5

(ii) ..... ✓ △ 3/5

(iii) ..... ✓ △ 3/5

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ தர) மற்றும் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

கட்டமைப்பு கட்டுரை வினாத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் வினாத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் ஒருங்கே கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஒவ்வொரு கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I இற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

PAST PAPERS WIKI

பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கன்முதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல,
நன்றி மறந்தமையா யாயின், மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லூரியவால் நினக்கே.

(i) தலைவனுடைய நாடு எவ்வாறு விவரிக்கப்படுகிறது? அந்த விவரிப்பின் மூலம் குறிப்பால் உணர்த்தப்படும் விடயம் யாது?

(ii) தலைவியின் அழகு எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

(iii) தலைவன் நன்றியுணர்வோடு இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் பாங்கில் காணத்தக்க நயத்தினை விளக்குக.

1.

அ)

(i) நாட்டு விவரிப்பு

தாய் யானையானது, தன்னுடைய பயன் மிக்க முலையிலே தன் கன்று பால் அருந்திக்கொண்டிருக்க, முற்றத்திலே உள்ள தினையை உண்ணுகின்ற இயல்பினை உடைய மலைநாடு. (2)

குறிப்பால் உணர்த்தப்படும் விடயம்

தலைவன் தன் சுற்றம் பயன்படும்படியாகக் காரியம் ஆற்றுவதோடு தலைவியின் நலனையும் களவில் அனுபவிக்கிறான். (2)

அல்லது

தலைவன் பொருள்தேடும் தன் கடமையை நிறைவேற்றுவதோடு தலைவியின் நலனையும் பேண வேண்டும்.

(04 புள்ளிகள்)

(ii) மென்மையும் (1) + சீர்மையும் (1) → (2) உடையதாய் மயிலின் தோகை போன்று விளங்கும் கூந்தலை உடையவள் (2)

(04 புள்ளிகள்)

(iii)

- பொருத்தமான உவமையணி மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

தான் வலி குன்றி இருந்த வேளையில் பிறரின் உதவிமூலம் அரசுரிமையாகிய வலிமையைப் பெற்று, பின் அரசு கட்டில் ஏறுவதற்கு உதவியவரை மறந்துவிடும் நன்றியுணர்வற்ற மன்னன் போல அல்லாது, தலைவனானவன் தலைவியிடம் பெற்ற நன்மைகளை மறவாதவனாய் அவளைச் சேர்ந்து வாழ வேண்டும்.

(04 புள்ளிகள்)

(ஆ) முன்னவன் என்று நினைந்திலன். மொய்ம் புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன். அன்னவை பேசானேல்,
என் இவன் என்னை இகழ்ந்தது? இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர் விடும் சரம் வாயாவோ?

(i) இச்செய்யுளில் விபரிக்கப்பெறும் சந்தர்ப்பம் யாது?
(ii) 'முன்னவன்', 'பின்னவன்' என்று சுட்டப் பெறுபவர்கள் யார் யார்?
(iii) இங்கு இடம்பெற்றுள்ள உவமையை இனங்கண்டு, அதைக் கையாண்ட நோக்கத்தை விளக்குக.
(12 + 12 = 24 புள்ளிகள்)

ஆ)

(i) கங்கையின் வடகரையில் தன் படைகளோடு வந்து நின்ற பரதனை, இராமனை அழிப்பதற்காகவே வந்தான் என்று சந்தேகித்துச் சீற்றமுற்ற குகன், தான் இருக்கும் வரையில் பரதனது எண்ணம் ஈடேறாது என்று வீரவுரை பேசிய சந்தர்ப்பம்.

இடம் சுருக்கமாகவிட்டால் 1புள்ளி
சந்தர்ப்பம் சுருக்கமாக விட்டால் 1புள்ளி குறைப்பு. (04 புள்ளிகள்)

(ii)

- முன்னவன் - இராமன்
- பின்னவன் - இலக்குவன்

(04 புள்ளிகள்)

(iii)

விளக்கம் தேவை - உவமை : மொய்ம்புலி அன்னான் (1)
– நோக்கம் : இலக்குவனது வீரத்தை / வலிமையை வலியுறுத்தல் (2)

(04 புள்ளிகள்)

உவமைக்குரிய விளக்கம் தேவையில்லை
உவமை இரண்டு நோக்கம் மட்டுமே தான் வேண்டும்.

[12 + 12 = 24 புள்ளிகள்]

2. (அ) பகுதியில் உள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்; வெல்லுவம் என்றே
திட மனத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடைய வள்சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;
இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்,
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

திறமை யால்இங்கு மேனிலை சேர்வோம்;
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்;
குறைவி லாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனிலவ ரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்;
அறவி ழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக் குப்பெண் விலங்கெனும் அ.·.தே.

விடியும் நல்லொளி காணுதி நின்றே,
மேவு நாக ரிகம்புதி தொன்றே;
கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு, தாம் முதல் என்றன ரன்றே?
அடியோ டந்த வழக்கத்தைக் கொன்றே,
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்விர்நந் தேசத்து வீரக்
காரி கைக்கணத்தீர், துணி வற்றே.

(i) இந்தக் கவிதை யாருடைய கூற்றாக அமைந்துள்ளது? ஆணைவிட, பெண் தாழ்ந்தவள் என்ற பாரம்பரிய சமூக மனப்பாங்கில் தங்களுக்கு உள்ள வெறுப்பை அவர்கள் எவ்வெவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்?

(ii) பெண்விடுதலைப் போராட்டத்தில் தாங்கள் வெல்லப்போவது தொடர்பில் அவர்கள் எதன்மீது பிரதிக்கினை செய்தார்கள்? அதை எதுவாக உருவகித்தார்கள்?

(iii) பூர்விக காலத்தில் ஆணும் பெண்ணும் சமானமானவர்களாக விளங்கினர் என்ற கருத்து இக்கவிதையில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

(iv) 'குறைவிலாது முழுநிகர் நம்மைக் கொள்வர் ஆண்கள் எனில்' என்ற நிபந்தனை மூலம் அவர்கள் எதிர்பார்ப்பது யாது? அந்த நிபந்தனை நிறைவேற்றப்பட்டால் அவர்கள் எதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்?

2.

(அ)

(i)

- விடுதலைக்கு வேட்கை கொண்ட மகளிர் கூற்றாக (பெண்கள் கூற்று)
- (ஆண் பெண் சமமாக பிறந்த புள்ளி) (கீழ்நிலை) புள்ளி

– ஆணும் பெண்ணும் சமமாகப் படைக்கப்பட்டாலும் இடைக்காலத்தில் அடிமை நிலையை அடைந்தமையை 'கீழ்நிலை' எனக் கூறுதல் மூலம்

– அந்நிலைமையை ஏற்றுக்கொள்ள முடியுமா என வினவுவதன்மூலம்

– 'தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்' எனக் கூறுவதன் மூலம்

– பெண்களை அடிமைகள் எனவும் தம்மை மேலானவர்களாகவும் கருதும் ஆண்களைக் கொடியவர்கள் என்பதன் மூலம் **(04 புள்ளிகள்)**

(ii)

– திடமனத்தின்மீது
– மதுக்கிண்ணமாக **(04 புள்ளிகள்)**

(iii)

– "சக்தி ஆண் பெண்ணிரண்டும் ஒரு நிகர் செய்துரிமை சமைத்தாள்"
என்ற தொடரில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
(ஆணும் பெண்ணும் சமம் என்பதே தெய்வ நியதி என்று உணர்த்தப்படுகிறது.) **(04 புள்ளிகள்)**

(iv)

– ஆணுக்குப் பெண் விலங்கு (தடை) என்னும் பண்டைய மூட வழக்கத்தை ஒழித்தல் / ஆணும் பெண்ணும் சரிநிகராக வாழும் நிலைமை
– தாய்நாட்டின் விடுதலைக்காக ஆண்களோடு சேர்ந்து உழைப்பதற்கு **(04 புள்ளிகள்)**

அல்லது

(ஆ) முகத்தார் கிணற்றடிக்குப் போகின்றார். கட்டியிருக்குஞ் சாறத்துடன் குளிப்பது அவருடைய வழக்கம். 'சனி நீராடு' என்ற வாரத்திற்கு ஒரு முறை; மூன்று பெருநாள் நீராட்டம் பிரத்தியேகமாக வந்து சேரும். தலையிலே மருத்துநீரை வைத்து நன்றாகத் தப்புகின்றார்.

"சித்தப்பா, சித்தப்பா" என்று அசோகன் ஆர்ப்பரிக்கிறான்.

'குமாரசாமி வந்திட்டானோ?'

ஆசையுடன் எட்டிப்பார்க்கிறார். தொட்டாச்சுருங்கி இலைகள் கூம்புகின்றன.

'இல்லை, அவன் மனோகரன்தான். மூண்டு நாலு மாசத்திலை கொஞ்சம் வளர்ந்திருக்கிறான். சொந்தமாகச் சம்பாரிக்க துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத்தானே? நல்ல தாராளமாகச் சிலவழிக்கிறார். ஓம், போய்க் கொஞ்ச மாசந்தானே? இவ்வளும் கொழும்புப் பழக்கங்கள் நல்லாப் புடிபடேல்லைப் போலை..... குமாரசாமியை இன்னும் காணேல்லை. சிலவேளை, நல்ல நாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?'

இந்த எண்ணம் ஏற்பட, காலையில் இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது. வலி தாங்கமாட்டாது அவஸ்தைப்படுகின்றார். அவஸ்தைப் பரிகார எத்தனத்தில் பெருமூச்சொன்று நீள்கின்றது..... இயந்திர வேகத்தில் கைகள் துலாக்கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் தலையிலேயே கொட்டப்படுகின்றது.

"நானும் நல்ல வேளைக்குத்தான் வந்திருக்கிறன். எல்லாரும் மருத்து நீராட்டம் முடித்தாயிற்றுப் போலை..... பத்மா இதைப் புள்ளையளுக்குப் பிரிச்சுக் குடு."

'இது நிச்சயமாக் குமாரசாமியின்ரை குரல்தான். உந்த வெண்கலக்கடை யானையின்ரை குரல் அவன்ரைதான்.'

தண்ணீர் காதுக்குள் புகுந்து, தன் மனக்குகை நினைவுகளுக்கு உருவங்கொடுத்தது. மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ என்றுகூட ஒரு கணம் நினைக்கின்றார். இருந்தாலும் ஆசை இழுக்கின்றது.

"அப்பு எங்கை."

"அவர் குளிக்கிறார்....." "அப்பு! சின்னண்ணர் வந்திருக்கிறார்" என்று பத்மா குரல் வைக்கின்றாள்.

துளிர்க்கும் நம்பிக்கை, பச்சையின் பசுமையை உறிஞ்ச, மறைப்புத் தட்டிக்கு மேலால் எட்டிப் பார்க்கின்றார்.

முற்றத்தில் குமாரசாமி சிரித்தபடி நிற்கிறான்.

(i) முகத்தாரின் வாழ்க்கை முறையில் உள்ள ஒழுங்கும் பாரம்பரிய வழக்கங்களில் அவருக்கு உள்ள நம்பிக்கையும் எவ்வாறு வெளிப்படுகின்றன?

(ii) குமாரசாமி வராமல் விட்டுவிடுவானோ என்ற ஐயம், முகத்தாரைப் பாதித்த வகையை ஆசிரியர் வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களில் காணத்தகும் நயங்களை விளக்குக.

(iii) குமாரசாமி இன்னும் வராததால் உண்டான அவஸ்தைக்கு பரிகாரம் தேடும் வகையிலான முகத்தாரின் செயற்பாடுகள் யாவை?

(iv) "மாரீச ஜாலம் நடைபெறுகிறதோ என்றுகூட ஒரு கணம் நினைக்கின்றார்?"

இந்தக் கூற்று மூலம் வெளிப்படுத்தப்படும் முகத்தாரின் மனநிலை யாது? 'மாரீச ஜாலம்' என்ற தொடரை விளக்குக.

(04 × 4 = 16 புள்ளிகள்)

ஆ)

(i)

– 'சனி நீராடு' என்ற மரபைப் பின்பற்றி சனிக்கிழமைகளில் தலையில் நீராடுதல் (1)

– பிரத்தியேகமாக மூன்று பெருநாள்களில் நீராடுதல் (1)

– தலையில் மருத்துநீர் வைத்துக் குளித்தல் (2)

(04 புள்ளிகள்)

(ii)

– "சித்தப்பா, சித்தப்பா..." என்ற அசோகனின் ஆர்ப்பரிப்புக் கேட்டு குமாரசாமிதான் வருகிறான் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து வருந்தியதை 'தொட்டாச் சுருங்கி இலைகள் கூம்புகின்றன' என்று குறிப்பிடுதல்
('தொட்டாச் சுருங்கி' அவரது மென்மையான மனத்துக்கு உருவகம்)

– 'நல்ல நாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?' என்ற எண்ணம் ஏற்பட்டதும் முகத்தாருக்கு 'காலையில இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது' என்று கூறுதலும் வலி தாங்கமாட்டாத அவரது நிலையை எடுத்துக்காட்டுதலும்
(குமாரசாமி தொடர்பாக அவரது நெஞ்சில் நிலைத்துவிட்ட துன்பத்தை 'நெஞ்சில் முள்' என உருவகித்தலும் அந்தத் துன்பம் மிகுதிப்படுவதை 'ஆழமாக இறங்குகின்றது' எனக் கூறுதலும்)

(04 புள்ளிகள்)

(iii)

– பெருமூச்சு விடுதல் (2)

– இயந்திர வேகத்தில் கைகள் துலாக்கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் கொட்டப்படுதல் (2)

(04 புள்ளிகள்)

(iv)

– குமாரசாமி வருவான் என்ற ஆசை நிராசையாகிவிடுமோ என்ற ஐயம் (2)

– உண்மையை மறைத்து பொய்த்தோற்றம் காட்டி ஏமாற்றுதல் (2)
(இராமாயணக் கதைச் சம்பவம் ஒன்று எடுத்தாளப்படுகிறது)

(04 புள்ளிகள்)

[04 × 04 = 16 புள்ளிகள்]

பகுதி II

3. திருக்குறளில் குற்றங்கடிதல் என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) குற்றங்களாகக் கூறப்படுவன
   (ஆ) குற்றம் கடிதல் தொடர்பாக பொதுவகையால் கூறப்படுவன
   (இ) குற்றம் கடிதல் தொடர்பாக சிறப்பு வகையால் கூறப்படுவன
   (ஈ) கையாளப்பட்டுள்ள அணி

(20 புள்ளிகள்)

3.

அ)

– செருக்கு, வெகுளி, காமம், உலோபத் தன்மை, நன்மையிலிருந்து விலகிய மான உணர்ச்சி, அளவு கடந்த மகிழ்ச்சி ஆகியன.

(04 புள்ளிகள்)

ஆ)

– தன்னிடத்தில் தினை அளவான் சிறிய குற்றம் வந்தாலும் அதைப் பனை அளவு பெரிதாகக் கருதுதல்

– தன்னிடத்தில் குற்றம் நேராதவாறு காத்துக்கொள்ளல்

– குற்றம் வருமுன்னரே தன்னைக் காத்தல்

– பிறர் குற்றத்தைக் காணும் முன்னர் தன் குற்றத்தை நீக்குதல்

(06 புள்ளிகள்)

இ)

பொருளால் செய்ய வேண்டியனவற்றைச் செய்தல் வேண்டும். அவ்வாறில்லாமல் பற்றுக்கொண்டு செல்வத்தைச் சேமித்து வைத்தால் அது வீணாய் அழிந்துவிடும் எனல்

உலோபத்தன்மை எத்தகைய குற்றத்தோடும் சேர்த்து எண்ண முடியாத அளவுக்குப் பெருங் குற்றமாகும் எனல்

ஒருவன் பெருமைக்குரியவனாக இருந்தாலும் தன்னை வியந்து பேசக்கூடாது, நன்மை பயக்காத செயல்களை விரும்பக்கூடாது எனல்

தான் விரும்பும் பொருள்களைப் பிறர் அறியா வண்ணம் அனுபவிக்கத் தெரிந்துகொண்டால் பகைவர் தன்னை வஞ்சனை செய்யும் சூழ்ச்சி பயனற்றுப் போய்விடும் எனல்

(06 புள்ளிகள்)

ஈ)

– குற்றம் வருவதற்கு முன்னர் அதனைக் காத்துக்கொள்ளாத அரசனின் வாழ்க்கை எரிமுகத்து நின்ற வைக்கோற் குவை போல அழிந்துவிடும்.

உவமானம் : நெருப்பின் முன்னால் வைக்கப்பட்ட வைக்கோற் போர்

உவமேயம் : குற்றம் வருவதற்கு முன்னர் அதனைக் காத்துக்கொள்ளாத அரசனின் வாழ்க்கை

பொதுத்தன்மை : முற்றாக அழிதல் / விரைவில் அழிதல் / சிறிய காரணத்தினாலேயே யாவும் அழிதல்

(04 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

4. கம்பராமாயணம் குகப்படலத்தில், முனிவர் ஆகாய மார்க்கமாகக் கங்கையைக் கடந்தது முதல் இலங்கைப் யாவரும் பரத்துவாச முனிவரின் ஆச்சிரமம் சேர்ந்தது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தவத்தின் சிறப்பு

(ஆ) பரதனின் உயர்வு

(இ) பரதன், குகனுக்கு கோசலையை அறிமுகம் செய்யும் விதம்

(ஈ) குகன், பரதன் ஆகியோரை, கோசலை தேற்றும் விதம்

(உ) சுமித்திரை குறித்த சித்திரிப்பு

~~[04 + 06 + 06 + 04 = 20 புள்ளிகள்]~~

4. உ)

(அ)

- எல்லாவுலகங்களிலும் தவறாமல் பலிக்கக்கூடிய உண்மையான தொழில் தவம் எனச் சிறப்பித்தல் (2)
- முனிவர்கள் தாம் நினைத்த மாத்திரத்தில் தேவர்களைப்போல் ஆகாயமார்க்கமாகக் கடந்து கங்கையின் தென்கரையை அடைந்தனர் என்பதனூடாக தவம் சிறப்பிக்கப்படல் (2)

2+2 = (04 புள்ளிகள்)

ஆ)

- வலியக் கிடைத்த இராச்சியத்தை ஆளுதலில் பற்றில்லாத காரணத்தினால், முன்னர் ஆண்ட சூரியகுல அரசர்களைவிட பரதன் குணத்தில் மேம்பட்டு விளங்குதல் எனல் 5.
- வெற்றி மாலை சூடிய அண்ணல் எனல்
- கோசலை, சுமித்திரை, இலக்குவன் ஆகியோரை உயர்வாக அறிமுகம் செய்துவைத்தல்
- வேடுவனாகிய குகனைத் தனக்கு மூத்தோனாகக் கூறுதல்
- வீரக் கழல் அணிந்த பாதத்தை உடையவன் எனல் 5.

(எவையேனும் நான்கு எனை) → (04 புள்ளிகள்) (உ

இ)

- 'கோக்கள் வைகும் முற்றத்தான்' என தசரதனைச் சிறப்பிப்பதோடு, அவனின் முதற் பட்டத்தரசி என கோசலையை உயர்வுபடக் கூறுதல்
- மூன்றுலகும் ஈன்றவனான பிரமனை முன்னீன்ற ஆதிமூலமாகிய பரம்பொருளையே மகனாகப் பெற்றவள் எனச் சிறப்பித்துக் கூறுதல்
- 'இராசமாதா' என அடைந்திருக்க வேண்டிய உயர்நிலையைத் தன் பொருட்டுத் துறந்த கோசலையைப் 'பெரியவள்' எனப் பாராட்டுதல்

(04 புள்ளிகள்)

ஈ)

- பரதனையும் குகனையும் 'மைந்தீர்' என விளித்தல்
- 'கவலைப்படாதீர்கள்' எனத் தேற்றுதல்
- குகனது நட்புக் கிடைத்தமையால் இராமன், இலக்குவன் ஆகியோர் நாட்டை விட்டுக் காடு சென்றமையானது துயரன்று, நலம் எனக் கூறுதல்

– குகனது வலிமையைப் புகழ்ந்து கூறுதல்
– 'நால்வராய் இருந்த தசரத குமாரர்கள் குகனோடு சேர்ந்து ஐவராகி விட்டார்கள்' என மகிழ்ச்சியோடு கூறுதல்
– "ஐவரும் ஒற்றுமையாக நிலவுலகம் முழுவதையும் நீண்ட நாள் ஆளுங்கள்" என ஆசீர்வதித்தல்

(04 புள்ளிகள்)

உ)

– அறமே வடிவெடுத்து வந்தவள் எனச் சொல்லத்தக்கவள் எனல்
– அன்பால் நிறைந்தவள் எனல்
– சத்தியத்தை நிலைபெறச் செய்து உயிர் துறந்த தசரதச் சக்கரவர்த்தியின் இளைய பட்டத்தரசி எனல்
– இராமனை விட்டுப் பிரியாத இலக்குவனைப் பெற்றெடுத்த பெருமையுடையவள் எனல்

(04 புள்ளிகள்)

[04 × 05 = 20 புள்ளிகள்]

5. கு. அழகிரிசாமியின் **தியாகம்** என்ற சிறுகதையில், அதன் பிரதான பாத்திரமான கதிரேசன் செட்டியாரின்,
(அ) தினசரி வாழ்க்கை ஒழுங்கு
(ஆ) கடைச் சிப்பந்திகளிடம் அவர் காட்டும் கண்டிப்பு
(இ) அவர்களிடம் அவர் காட்டும் கருணை
(ஈ) அவரது தியாக சிந்தை
என்பன வெளிப்படும் பாங்கை விளக்குக.

(20 புள்ளிகள்)

5.

(அ)

– காலை பத்து மணிக்குப் பலகாரம் சாப்பிடுதல்
– பத்து நிமிடம் உட்கார்ந்து உண்ட சிரமத்தைப் போக்கிக்கொள்ளல்
– பதினைந்து நிமிட நடைமூலம் கடையைச் சென்றடைதல்
– கடிகாரம் கட்டாமலேயே வருடம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் ஒரே மாதிரியாக கடைக்கு வருதலும் வீடு திரும்புதலும்

(05 புள்ளிகள்)

ஆ)

– முகத்தை எப்பொழுதும் கடுகடுப்பாக வைத்திருத்தல்
– ஏதாவது ஒரு காரணம் தேடி எந்நேரமும் சிப்பந்திகளை ஏசுதல்
– அவர்களின் தோற்றத்தைக் காரணங்காட்டி ஏசுதல்
– சொன்ன வேலைகளை அவர்கள் சரியாகச் செய்தாலும் ஒரு காரணம் தேடி ஏசுதல்
– எதிர்த்துக் கேள்வி கேட்டாலும் ஏசுதல்

(05 புள்ளிகள்)

இ)

- கடை வேலைகளைத் தவிர சிப்பந்திகளுக்கு வேறு வேலை கூறாமை
- வீட்டுக்கு வரும் சிப்பந்திகளை அன்போடு பேசி உபசரித்தல்
- பிறர் தமது சிப்பந்திகள்மீது கூறும் குறைகளை கருத்திற் கொள்ளாதிருத்தல்
- பண்டிகைக்குப் பணமும் ஆடையும் கொடுத்தல்
- திருமணத்திற்கு உதவிசெய்தல்
- சொந்தமாகக் கடைவைக்கும் தமது சிப்பந்திகளுக்கு உதவிசெய்தல்
- சிப்பந்திகள் கேட்காமலேயே திருவிழாவுக்குச் செல்லும்படி கூறி பணமும் கொடுத்து அனுப்புதல்

(05 புள்ளிகள்)

ஈ)

- கதிரேசன் செட்டியாருக்கும் ~~சோமசுந்தரம்~~ சண்முகம் பிள்ளைக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் இவரது தியாக சிந்தையை வெளிப்படுத்துகிறது.
- தமது வருத்தத்தைக் கருத்திற்கொள்ளாமல் தொடர்ந்தும் அவர்களை ஏசியும் கண்டித்தும் அவர்களின் முன்னேற்றம் தொடர்பாகக் காட்டும் அக்கறை.
- தன்னை நம்பிப் பிள்ளைகளை ஒப்படைத்த பெற்றோரை ஏமாற்றக்கூடாது என்று கொண்டிருக்கும் எண்ணம்.

  "அண்ணாச்சி? நீங்க என்னதான் சொல்லுங்க பயக நல்லபடியாகத் தலையெடுக்கணும். இவ்வளவு காலமும் இப்பிடி இருந்துட்டு இனி எவன் எக்கேடு கெட்டா என்னண்ணு என்னாலே இருக்க முடியாது. இனிமே என்ன? வயசு அறுபதாச்சு. உசுரை வச்சிருந்து என்னத்தைச் சாதிக்கப் போறோம்?" என்று தியாக உணர்ச்சியோடு பேசும் பேச்சில் காணப்படும் உறுதி.

(05 புள்ளிகள்)

[05 × 04 = 20 புள்ளிகள்]

6. புதுமைப்பித்தனின் தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) நாகரிகம் பற்றிய ஆசிரியரின் கருத்து

(ஆ) பட்டணத்துக்காரரின் பட்டணத்து வாழ்க்கைமுறை

(இ) அவர்கள் கிராமத்திலும் வாழும் பட்டணத்து வாழ்க்கைமுறை

(ஈ) கிராமத்து மக்கள் மற்றவருடன் பழகும் முறை

(20 புள்ளிகள்)

6.

(அ)

- சமுதாயம் இற்றுப் போகாமல் எடுத்துக்காட்டிய ஞாபகச் சரடு. நினைவுப் பாதை.
- சமுதாயம் எறும்புச்சாரை போல் ஊர்ந்து ஊர்ந்து பழக்கப்பட்டுப் போன பாதை.
- இதுவரை இருந்து வருவதற்கு உயிர் கொடுத்து வருவது.
- வெறும் பிழைப்புக்கும் பிறகு சுகானுபவத்துக்கும் அதன் பிறகு உள்ளத்தில் உடைந்து மசியும் நினைவுக் கோயில்களுக்கும் ஆதார பீடமாக அமைந்திருப்பது.

(05 புள்ளிகள்)

ஆ)

- பல வருட உழைப்பால் உடலைக் கெடுத்தல்
- நேர்ச்சைக் கடனுக்காகக் கையைக் கும்பிட்டபடி உயரத் தூக்கி சும்பவைத்துக் கொண்ட பைராகி மாதிரிக் காலை பத்து மணி முதல் மாலை 5 மணி வரை மூளையை ஒரே திசையில் விரட்டி விரட்டி வேலை செய்தல்.
- தன் பிள்ளைகளை நன்னிலைக்குக் கொண்டுவருதல்

டில்லி சர்க்கார் காரியாலயத்தில் ஒரு மகன், என்ஜினியரின் கம்பெனியில் ஒரு மகன், ஒரு அட்வகேட் ஜெனரலின் மகனுக்கு சக தர்மிணியாக ஒரு மகள், காலேஜக்கு ஐம்பது மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிலில் போவதுதான் மோட்ச சாம்ராஜ்யம் என்று நினைக்கும் சுந்தா, இவ்வாறு ஒருபடியாகத் தமது வாரிஸ் வர்க்கத்தைப் பங்கீடு செய்தவர்.

(05 புள்ளிகள்)

(இ)

- பத்திரிகையும், பழக்கூடையும் பட்டணத்திலிருந்து வருதல்
- ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் வெந்நீரில்தான் குளித்தல்
- உடம்புக்குள் உயிர் பெய்வதுபோல தென்றல் இழைந்தாலும் பிளானல் சட்டை போட்டுக்கொண்டு, வெள்ளிப் பூண் தடியோடு உலாவச் செல்லுதல்
- ராவணன், மண்ணோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக்கொண்டு போய் அசோக வனத்தில் சிறை வைத்தது போல பட்டணத்தில் கொஞ்சத்தைப் பெயர்த்துக்கொண்டு போய், கிராமத்தில் போட்டு, அதன்மேல் உட்கார்ந்துகொண்டுதான் கிராம வாழ்வை வாழ்தல்

(05 புள்ளிகள்)

ஈ)

- யாராவது கிராமத்திற்குப் புதிதாக வந்துவிட்டால் "யாரைத் தேடுதிய? ஓ... அவுகளா... ஏலே காத்தான், நாவன்னா வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போ" என்று வீட்டு வரைக்கும் கொண்டுபோய் விட்டுத் திரும்புதல்
- மறுநாள் விடியற்காலம் அவரைப் பார்த்துவிட்டால் அவர் ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் வாயைத் திறந்து நாலு வார்த்தையாவது பேச வைத்துவிடுதல்
- அவர்களுக்கு நேரம், அவகாசம் பார்க்காமல் வந்து உட்கார்ந்து பேசுவதற்குத் தெரிந்திருத்தல்
- தம் கிராமத்துக் கடந்த கால நிகழ்வுகளை சரித்திர ஆசிரியன் போலப் பகிர்ந்துகொள்ளுதல்

(05 புள்ளிகள்)

[05 × 04 = 20 புள்ளிகள்]

7. வேந்தனாரின் **கவிஞன்** எனும் கவிதையில்,
   (அ) உண்மைக் கவிஞரின் இயல்பு
   (ஆ) நிலையாத கவிதைக்கும் நிலைத்து நிற்கும் கவிதைக்கும் இடையிலான வேறுபாடு
   (இ) பொய்மைக் கவிஞர் பற்றிய ஏளனப் பார்வை
   (ஈ) பாரதியின்மேல் கவிஞருக்குள்ள மதிப்பு
   என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

07.

(அ)

- வெள்ளப் பெருக்கைப் போல உணர்ச்சி ஊற்றெடுத்து, வாடும் மக்கள் சிறப்புப் பெற மறுமலர்ச்சி வாழ்வை வழங்கும் ஆற்றலுடனும் கொள்கைப் பிடிப்புடனும் குமுறும் உணர்வுடனும் கவிதை இயற்றுதல்
- வறுமையால் வாடினாலும் எரிமலைபோல் சிந்தனைத் திறனுடன் கவி இயற்றுதல்
- தன்மானத்து உள் ஒளியால் உலகை ஓம்பும் தனியாற்றல் கொண்டு தாங்கி நிற்றல்.

(05 புள்ளிகள்)

ஆ)

- நிலையாத கவிதை
  - பஞ்சணை மெத்தையில் வீற்றிருந்து பல நூல்களைப் பார்த்து பாடுகின்ற கவிதைகள்
  - பாராளும் வேந்தர்களுக்கு அஞ்சி அவர்களது கட்டளைப்படி அடங்கி நின்று எழுதும் கவிதைகள்
  - தனியே சொல்லலங்கார வார்த்தைகள் கொண்டு பாடும் கவிதைகள்
- நிலைத்து நிற்கும் கவிதை
  - வீரனின் வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல விசைகொண்டு அறிவு தாங்கிய புலமைசார் சொல்லாற்றலால் சாற்றுகின்ற கவிதைகள்

(05 புள்ளிகள்)

இ)

- சுகங்களை அனுபவித்துக் கொண்டு அரசனது ஆணைக்கு அடங்கி நடப்பார்கள்.
- வெறுமனே சொல்லலங்காரங்களைக் கையாண்டு பாடுவர்.
- பல்வேறு பாவினங்களில், திரும்ப திரும்ப சொல்லி கண்ணீர்விட்டு கூலிக்கு மாரடிக்கும் பெண்கள் போல சொன்மாலை தொடுப்பர்
- வீட்டுக்குள் வீற்றிருந்து கொள்கை இன்றி விண்ணப்பப் பதிகம் விளம்புவர்.

(05 புள்ளிகள்)

ஈ)

- பாரதியை 'பாட்டினுக்கோர் புலவன்' என்று தமிழ்நாடு எங்கும் பாராட்டுதல்
- நாட்டுக்கான விடுதலைப் போர் வெறியை ஊட்டும் கவிதைகள் அவருடையவை எனல்
- நற்றமிழுக்கும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் எனல்
- பாரதியாரை இறவாத கவிஞர் என அடையாளப்படுத்துதல்

(05 புள்ளிகள்)

[05 × 04 = 20 புள்ளிகள்]

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) மணிமேகலை பாடப்பகுதியில் வெளிப்படும் சாத்தனாரின் வர்ணனைத் திறம்

(ஆ) திருப்பாணாழ்வாரின் **அமலனாதிபிரான்** பதிகத்தில் வெளிப்படும் திருவரங்கனின் பாதாதிகேச அழகு

(இ) வ. ரா. வின் **சம்பாசணை ஒரு கலை** என்ற கட்டுரையில் வெளிப்படும் மகாத்மா காந்தியின் சம்பாசணைத் திறன்

(ஈ) வீரமாமுனிவரின் **தேம்பாவணி காட்சிப்படலத்தில்** வெளிப்படும் யேசுபாலன் மேலதான முல்லைநில இடையர்களின் ஆர்வம்

(உ) அப்துல்ஸமதுவின் **எனக்கு வயது பதின்மூன்று** சிறுகதையில் வெளிப்படும் சல்மாவின் சுதந்திர உணர்வு

(20 புள்ளிகள்)

08.

அ)

- கிழக்குத் திசையிலே நாள் முதிர்ச்சியுற்ற சந்திரனும், மேற்குத் திசையிலே சென்று மறைகின்ற சூரியனும் காட்சி தருதல். அக்காட்சி வெள்ளியாலாகிய வெண்தோடாகவும், பொன்னாலாகிய தோடாகவும் இருபுறத்தேயும் விளங்க புகார் நகர் எனும் பெண்ணின் முகம் பொலிவுற்றிருத்தல்
- அன்னச் சேவலானது தன்மீது அன்பு கொண்டு தன்னுடன் மெய்மறந்து விளையாடிக் கொண்டிருந்த தன் பெடையைத் தாமரை மலரானது குவிந்து தன்னகத்தே அடக்கிக் கொள்ள, அப்பூவினது இதழ்கட்டு சிதையுறுமாறு கிழித்துத் தன் பெடையை மீட்டு அதனோடு தென்னையின் மடலிலே ஏறியிருத்தல்
- அன்றிற் பெடையானது மெல்லிய குரலில் தன் சேவலுக்கு அந்திப்பொழுது மறைவதை எடுத்துக்கூறுதல்
- பசுக்கள், தாம் நடந்து செல்வதால் எழுகின்ற புழுதி தணியும்படி தம் முலைகளிலிருந்து பால் சொரியும் வகையில் தம் கன்றுகளை நினைந்து இரங்கிக் குரல் எழுப்பியவாறு தொழுவங்களை நோக்கிச் செல்லுதல்
- அந்தணர்கள் அந்திப் பொழுதுக்குரிய செந்தீயினை வளர்க்கத் தொடங்குதல்

- பெண்கள் மனை விளக்குகளை ஏற்றத் தொடங்குதல்
- பாணர்கள் மருதப் பண்ணினை எழுப்புதல்
- இடையர்கள் முல்லைத் தீம்பாணியினை இசைத்தல்
- போர்க்களத்தில் தமது கணவனை இழந்து தன் சுற்றத்தாரின் வீட்டினை நோக்கிப் போகின்ற ஒப்பற்ற ஒரு பெண்ணைப் போலத் தன் காதலனாகிய கதிரவனை வழியனுப்பி வைத்த (மறைந்து செல்ல விட்ட) நீங்காத துன்ப நினைவோடு மாலைப் பொழுது என்னும் பசலை நோயைப் போர்த்த மேனியினை உடையவளாக மாலை என்பவள் அப்புகார் நகரை வந்து அடைதல்

(10 புள்ளிகள்)

ஆ)

- பாதங்களாகிய தாமரைகள் கண்ணில் உள்ளன.
- சிவந்த ஆடையில் உள்ளம் சென்றுவிட்டது.
- ஒப்பற்ற அழகுடைய திருநாபியில் உயிர் நிலைத்துவிட்டது.
- திருவயிற்றில் அணியப்பட்ட ஒட்டியாணம் உள்ளத்தில் உலாவுகின்றது.
- முத்துமாலை அணிந்த திருமார்பு அடியேனை ஆட்கொண்டுவிட்டது.
- உலகை விழுங்கிய ஒப்பற்ற திருக்கழுத்து அடியேனை உய்யச்செய்துவிட்டது (ஐயோ... எனல்)
- திரட்சிபெற்று பிரகாசமாய் சிவந்த வரிகள் நீண்டிருக்கும் பெரிய கண்கள், பித்தனாக்கிவிட்டன.
- நீலமேனி, மனத்தை முழுமையாக நிறைத்துவிட்டது.

(10 புள்ளிகள்)

இ)

- காந்தி - இர்வின் ஒப்பந்தப் பேச்சுமூலம் வெளிப்படல்
  - இவர்கள் விடியற்காலை மூன்று மணிவரை பேசிக்கொண்டிருந்தார்கள்.
  - இவர்களின் உரையாடலில் அர்த்தமும் ரஸமும் பாவமும் நிறைந்திருந்தது.
  - மகாத்மாவோடு பேசுவதற்கு வைஸ்ராய் இர்வினுக்கு மிக்க ஆவல்.
- வைஸ்ராய் வில்லிங்டனுடன் தொடர்புபடுத்திக் கூறுதல்
  - குதர்க்கம் செய்யும் வேலை மகாத்மாவுக்குத் தெரியாது.
  - சொல்லுக்கு உண்மையானதும் இயற்கையானதுமான அர்த்தத்தில் அதைக் கொள்வதுதான் அவர் பழக்கம்.
  - தெனாலிராமனைப் போல விகடமாகவும் விபரீதமாகவும் அர்த்தம் செய்து, ஏய்க்கப்பார்க்கும் ராஜதந்திர நிபுணர் வில்லிங்டன், கணப்பொழுதில் மகாத்மாவிடம் மாட்டிக்கொள்வார்.
- சூதான சொல்வலை வீசி ஏய்க்கப் பார்ப்பவர்கள் காந்தியின் சாதுவலையில் அகப்பட்டுக்கொள்வார்கள் எனல்

- காந்தியின் சம்பாஷணையின்போது பலாப்பழத்தில் ஈ மொய்ப்பது மாதிரி கூடிக்கொள்வார்கள் எனல்

(10 புள்ளிகள்)

ஈ)

- திருக்குழந்தையைக் கண்டு பாதங்களைப் பணிந்தமை
- மீண்டும் மீண்டும் வணங்குகின்றமை
- முல்லை மாலையோடு எல்லாப் பக்கங்களிலும் நெருங்கி நின்றமை
- பக்தி உணர்வு மேலிட பலவாறு புகழ்ந்தமை
- பக்தி உணர்ச்சி மேலிட காணிக்கைகளை அளித்தமை
- செல்லுமாறு கட்டளை இட்டதும் பிரிய மனமில்லாது உயிரை அங்கு வைத்துவிட்டு, உயிரில்லாது சென்றமை
- மீண்டும் வணங்கி பேரின்பத்தை அடையும் பொருட்டு தினந்தோறும் குழந்தையைக் காண கூட்டமாக வந்தமை
- சாந்தி என்னும் இடையர் குலப் பெண், இயேசுபாலனின் பிறப்பு தொடர்பாக எழுப்பும் ஐயவினாக்களும் மரியாள் மூலம் பெற்ற தெளிவும் இயேசுபாலன் மேலதான ஆர்வத்தைப் புலப்படுத்துகின்றமை

(10 புள்ளிகள்)

உ)

- சிக்கந்தர் வீட்டு வேலைக்காரியான ஸல்மா 'வீட்டு வேலை' செய்தல் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, நெசவு நிலையத்தில் வேலை பழக நினைத்தல்
- உணவால் உடல் வளரும். மனமகிழ்வும் திருப்தியும் எப்படி வரும்? என நினைத்தல்
- தின்பது, குடிப்பதில்கூட, தான் ஒரு வேலைக்காரியாக நடத்தப்படுவதாக உணர்தல்
- சோறு தின்ன ஒரு பீங்கான், தேனீர் குடிக்க ஒரு கோப்பை, படுக்க தனிப் பாய்... எல்லோரும் முடித்ததும் தனது பீங்கானைக் கழுவி எடுத்துப் போய் தனது சோற்றை வாங்குதல் - இதனூடாகத் தன்னைச் சிறைக் கைதிகளோடு ஒப்பிடுதல்
- 'வேலைக்காரியான காரணத்தால் இழிந்தவள் ஆனேன்' என்றும் 'தன் எண்ணத்தின்படி நடக்க முடியவில்லை, ஆசைப்படி உடுக்க முடியவில்லை' என்றும் சிந்தித்தல்
- 'இந்த வீட்டுக்கு வந்து என்னத்த படிச்சுக் கொண்டேன்' என தன்னைத் தானே கேட்டல்

10 புள்ளிகள்)

[10 × 02 = 20 புள்ளிகள்]

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை -2025

72- தமிழ் - II

புள்ளி வழங்கும் திட்டம்

இவ்வினாத்தாளிற் கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களுள், முதலாம் பகுதியிலுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்களுக்கும், இரண்டாம் பகுதியிலுள்ள ஐந்து வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்குப் பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும்.

பகுதி I

01. இலக்கணம்				
1X20		=	20 புள்ளிகள்	20 புள்ளிகள்
02. அ.	சுருக்கம்	=	13 புள்ளிகள்	
ஆ.	கிரகித்தல்	=	12 புள்ளிகள்	25 புள்ளிகள்
03. கட்டுரை				
	பொருள்	=	12 புள்ளிகள்	
	மொழிநடை	=	08 புள்ளிகள்	
	அமைப்பு	=	05 புள்ளிகள	25 புள்ளிகள்

பகுதி II

04. அ.	05 புள்ளிகள்	
ஆ.	05 புள்ளிகள்	
இ.	05 புள்ளிகள்	15 புள்ளிகள்
05. அ.	05 புள்ளிகள்	
ஆ.	05 புள்ளிகள்	
இ.	05 புள்ளிகள்	15 புள்ளிகள்
06. அ.	05 புள்ளிகள்	
ஆ.	05 புள்ளிகள்	
இ.	05 புள்ளிகள்	15 புள்ளிகள்
07. அ.	05 புள்ளிகள்	
ஆ.	05 புள்ளிகள்	
இ.	05 புள்ளிகள்	15 புள்ளிகள்
08. அ.	10 புள்ளிகள்	
ஆ.	05 புள்ளிகள்	15 புள்ளிகள்

[සියලු හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

දෙමළ	II	72 T II
தமிழ்	II	
Tamil	II	

පැය තුනයි மூன்று மணித்தியாலம் *Three hours*	අමතර කියවීම් කාලය மேலதிக வாசிப்பு நேரம் Additional Reading Time	- මිනිත්තු 10 යි - 10 நிமிடம் - 10 minutes

විභාග අංකය / பரீட்சார்த்தி இலக்கம் / Index Number

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : .....

அறிவுறுத்தல்கள் :

* பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் - எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு - விடை எழுதுக.
* பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

பகுதி I

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் அரை உயிர்
(1) ஒள (2) ய் (3) ஊ (4) கௌ (5) ∴ (..2..)

1.2 பின்வருவனவற்றுள் பல்மூக்கொலி
(1) ன் (2) ஞ் (3) ந் (4) ண் (5) ங் (..3..)

1.3 'த'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) வந்தேன் (2) கதவு (3) இதயம்
(4) தேர்வு (5) வாழ்தல் (..3..)

1.4 பின்வருவனவற்றுள் பகுபதம்
(1) விருந்து (2) பருந்து (3) மருந்து
(4) இருந்து (5) வருந்து (..4..)

1.5 இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) வந்தான் (2) தேயிலை (3) சொற்கள்
(4) படங்கள் (5) தேநீர் (..5..)

1.6 இயல்பாகப் புணரத்தக்க சொற்சோடி
(1) என்னை + கேட்டான் (2) அ + மனிதன் (3) மரம் + கொப்பு
(4) திருநிறை + செல்வி (5) புளி + பழம் (..4..)

1.7 சாரியை இடம்பெற்ற சொல்
(1) மாதுளம்பழம் (2) வாழைப்பழம் (3) பலாப்பழம்
(4) கொய்யாப்பழம் (5) மாம்பழம் (..1..)

1.8 பெயரடையை ஏற்காத பெயர்ச்சொல்
(1) மரம் (2) இசை (3) மறைவு
(4) ஆட்டம் (5) ஓடியமை (..5..)

1.9 அமைப்பு ரீதியாகத் தனித்து நிற்கும் கூட்டுப் பெயர்
(1) மதுசாரம் (2) மலர்மாலை (3) பேசுபொருள்
(4) பண்டகசாலை (5) பள்ளியறை (..3..)

1.10 பால்விகுதி மூலம் ஆண், பெண் வேறுபாடு உணர்த்தும் சொல்
(1) மாணவர் (2) கவிஞன் (3) தந்தை
(4) தாய் (5) தொழிலாளி (..2..)

1.11 'ஆன்றோர்க்கு அழகு அடக்கம்' இங்கு இடம்பெற்றுள்ள 'கு' உருபின் பொருள்
(1) தகுதி (2) பகை (3) கொடை (4) நட்பு (5) முறை (..1..)

1.12 இருதிணை, ஐம்பால், மூவிடத்துக்கும் பொதுவான வினை
(1) தனிவினை (2) கூட்டுவினை (3) வியங்கோள்வினை
(4) செய்வினை (5) துணைவினை (..3..)

1.13 விகுதியால் காலம் உணர்த்தும் சொல்
(1) வந்தேன் (2) வருகிறான் (3) வருவர்
(4) வரும் (5) வரவில்லை (..4..)

1.14 பின்வருவனவற்றுள் பொதுவினை
(1) அடி (2) கடி (3) முடி (4) பிடி (5) குடி (..3..)

1.15 'பார்' என்ற துணைவினை 'முயற்சித்தல்' என்ற பொருளில் இடம்பெற்ற வாக்கியம்
(1) புதுச் சட்டையைப் போட்டுப்பார்த்தேன்.
(2) கவிதை ஒன்றை எழுதிப்பார்த்தேன்.
(3) கால் தவறி விழப்பார்த்தேன்.
(4) பிரச்சினைகளை ஆராய்ந்துபார்த்தேன்.
(5) குடியிருப்பதற்கு ஒரு வீடு பார்த்தேன். (..2..)

1.16 'உம்' இடைச்சொல் முற்றுப்பொருளில் இடம்பெற்ற வாக்கியம்
(1) கடதாசியாலும் பூக்கள் செய்யலாம்.
(2) மழை முழுமையாக நின்றதும் புறப்படுவோம்.
(3) கெஞ்சிக் கேட்டாலும் தரமாட்டான்.
(4) தெரிந்தவர்கள் யாரேனும் வந்திருக்கிறார்களா?
(5) வாயில் வந்த எல்லாவற்றையும் பேசலாமா? (..5..)

1.17 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் தொக்க வாக்கியம்

(1) அப்பா படித்துக்கொண்டிருக்கிறார்.
(2) அப்பா கதையோட்டத்தில் கலந்துவிட்டார்.
(3) அப்பா கதையில் மூழ்கிவிட்டார்.
(4) அப்பா கதையால் கவரப்பட்டார்.
(5) அப்பா கதையோடு ஒன்றிவிட்டார்.

(..1..)

1.18 எதிர்மறை இடைநிலை மூலம் எதிர்மறை வாக்கியமாக்கத்தக்கது

(1) என்னிடம் அந்தப்புத்தகம் இருக்கிறது.
(2) அவள் பாடங்களை நன்கு விளங்கிக்கொண்டாள்.
(3) இந்தக் கட்டுரை நன்றாக எழுதப்பட்டுள்ளது.
(4) அவன் நாளை என்னைச் சந்திக்க வருவான்.
(5) இது எங்கள் ஊரில் உள்ள பெரிய குளம்.

(..4..)

1.19 வாக்கிய இணைப்பின்போது, பயனிலை தன்மைப்பன்மை வினைமுற்றாக அமையத்தக்க தவிர்வாக்கியங்கள்

(1) அவனிடம் நல்ல அறிவு உள்ளது. + அவனிடம் நல்ல குணங்கள் உள்ளன.
(2) நீ கவனமாகப் படிக்கிறாயில்லை. + அவன் கவனமாகப் படிக்கிறானில்லை.
(3) நண்பன் உயர்கல்வியில் கவனம் செலுத்தினான். + நான் உழைப்பதில் கவனம் செலுத்தினேன்.
(4) எனக்கு சினிமா பார்ப்பது பிடிக்கும். + என் நண்பனுக்கு சங்கீதம் கேட்பது பிடிக்கும்.
(5) இட்டலி எனக்குப் பிடித்த உணவு. + தோசை தம்பிக்குப் பிடித்த உணவு.

(..3..)

1.20 செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றமுடியாதது எது?

(1) காந்தன் பெரிய பெரிய வேலைகளையெல்லாம் செய்கிறான்.
(2) அவன் தன்னைப் பெரிய ஆளாகக் கருதுகிறான்.
(3) வேட்டைப் பிரியர்கள் விலங்குகளைக் கொடூரமாக வேட்டையாடுகிறார்கள்.
(4) ஊடகங்கள் அதிகாரிகளின் ஊழல்களை அம்பலப்படுத்துகின்றன.
(5) நீதித்துறை சில வேளைகளில் நிரபராதிகளையும் தண்டித்துவிடுகிறது.

(..2..)

(20 புள்ளிகள்)

* *

பகுதி I

2. (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

சங்க காலப் புலவர்கள் காதலையும், வீரம் கொடை முதலியவற்றையும் பொருளாகக் கொண்டு பாடியபோதிலும், நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாக அவர்கள் அமைத்த இயற்கைக் காட்சிகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன. வானத்தின் விந்தையான காட்சிகள், மலையின் எழிலான தோற்றங்கள், காடுகளின் அழகிய மரஞ் செடி கொடிகள், விலங்குகள், பறவைகள், குளங்களின் தாமரை முதலிய பூக்கள், கடற்கரையின் சோலைகள், பருவக்காற்றுகள் முதலிய பலவும் அவர்களின் உள்ளம் கவர்ந்து விருந்து அளித்தன. அவைகளை பெற்று மகிழ்ந்த இயற்கையழகு என்னும் விருந்தைப் பிறரும் நுகருமாறு சொல்லோவியங்களாகத் தீட்டி அளித்துள்ளார்கள். ஆனால் எல்லாப் பாடுக்களிலும் முதன்மையான நோக்கம் காதல் அல்லது வீரம், கொடை முதலியவற்றைப் பாடுவதே; இயற்கையின் அழகு, காதல் நிகழ்ச்சிக்கோ மற்ற நிகழ்ச்சிக்கோ பின்னணியாக வந்து இரண்டாம் இடமே பெறுகிறது. ஆயினும், அந்தப் பாட்டுகளின் இயற்கை வருணனை மறக்கமுடியாதவாறு நெஞ்சில் அழகுணர்ச்சியைப் பதியச் செய்கிறது.

பிற்காலத்தார் அந்த வருணனைகளைப் போற்றித் தம் நெஞ்சத்தைப் பறிகொடுத்துள்ளனர் என்பது பல குறிப்புகளால் விளங்குகிறது. சங்கப் பாட்டுகள் பல அங்கங்கே சிதறிக்கிடந்து பிறகு வந்தவர்கள் அவற்றைத் தொகுக்க முற்பட்டார்கள் அல்லவா? அப்போது, சில ஊர்களில் சில பல பாட்டுகள் மட்டும் கிடைத்தன, பாடிய புலவர்களின் பெயர்களும் வரலாறுகளும் கிடைக்கவில்லை. அந்த நிலையில் புலவர் சிலருக்குப் பெயர் குறிக்கவேண்டுமே என்று கவலைப்பட்டபோது, அந்தப் பாட்டுகளில் உள்ள இயற்கை வருணனைகள் அவர்களுக்கு உதவியாக இருந்தன. அந்த இயற்கைக் காட்சிகளைப்பற்றி விளக்கும் தொடர்களில் மிகக் கவர்ச்சியான ஒன்றைக் கொண்டே புலவரின் பெயர் அமைத்துக்கொண்டனர்.

செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் பற்றிய தொடரால் ஒரு புலவர் செம்புலப்பெயல் நீரார் என்று குறிக்கப்பட்டார். பாழடைந்த ஒரு சிற்றூரின் வீட்டு முற்றத்தில் விளையாடும் அணில் பற்றிய காட்சியை விளக்கிய புலவர் அணிலாடுமுன்றிலார் எனப்பட்டார். இரண்டு யானைகளின் துதிக்கைகளால் பற்றி இழுக்கப்படும் பழங்கயிறு பற்றிப் பாடியவர் தேய்புரிப் பழங்கயிற்றினார் எனப்பட்டார்.

(13 புள்ளிகள்)

2.

(அ)

- சங்ககாலப் புலவர்கள் நிகழ்வுகளுக்குப் பின்னணியாக அமைத்த இயற்கைக் காட்சிகள் சிறப்பாக அமைந்துள்ளன.
- பாடல்களின் முதன்மை நோக்கம் காதல் அல்லது வீரத்தைப் பாடுவதேயாயினும், அவற்றின் பின்னணியாய் அமையும் இயற்கை வருணனை மறக்க முடியாத அழகுணர்ச்சியை ஏற்படுத்தும்.
- பிற்காலத்தார் அந்த வருணனைகளைப் போற்றியுள்ளமையைப் பல குறிப்புகளால் அறிய முடிகின்றது.
- பெயர் அறியப்படாத புலவர்களுக்கு அவர்கள் கையாண்ட இயற்கை வருணனையைக் குறிக்கும் தொடர்களை அடிப்படையாகக் கொண்டே பெயர் சூட்டப்பட்டது.

உள்ளடக்கம் 08

வெளிப்பாட்டுத்திறன் 05

(08 + 05 = 13 புள்ளிகள்)

(அ) ஒருபகுதி அலகு.
45 — 55 மையப்புள்ளி
40 – 44 – } உபபுள்ளி தரப்படும்
56 – 60 – }
இதற்கேற்ப 35 – 39 – உபபுள்ளி தரப்படும்
ஏனையவை 34 – 61 – உபபுள்ளி உடனடியாக அறுதியிடுக

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பாரதியாரின் கவிதையைப் படிக்கும்போது முதலிலே புலப்படுவன அதன் எளிமையும் உணர்ச்சி வேகமும் ஆகும். அடிமைப்பட்டுக்கிடக்கும் பாரத நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்ற உணர்ச்சி அவருடைய உள்ளத்திலே பொங்குகிறது. அவருக்கு இயல்பாகவே அமைந்த கவியாற்றலினாலே அந்த உணர்ச்சி உண்மையான வடிவத்தைப் பெறுகிறது. உள்ளத்திலே தெளிவு இருக்கும்போது இது தெள்ளிய, எளிய முறையிலே அனைவருக்கும் புரியும்படியாக வெளிப்படுகின்றது. அந்தத் தெளிவும் உணர்ச்சியும் இல்லாதபோது வார்த்தைகள் நேராக வருவதில்லை; பின்னிக் கொள்ளுகின்றன; மனப்பாடம் செய்த நிகண்டுகளிடம் தஞ்சம்புக நேரிடுகின்றது.

'புனர்ஜன்மம்' என்ற கட்டுரையிலே பாரதியார் கவிதை பற்றிய தனது கருத்தைத் தெளிவாக விளக்கியிருக்கிறார். "நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று; சுசி குறைந்தது; கரடு முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை, நமது கவிஞர்களுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர், 'கண்' என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினர்; ரஸம் குறைந்தது; சக்கை அதிகமாயிற்று; உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன. கவிதையிலே ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை."

(i) பாரதியாரின் கவிதையைப் படிக்கும்போது முதலிலே புலப்படும் விடயங்கள் யாவை?

(ii) பாரதியாருக்கு இயல்பாகவே உள்ள கவியாற்றலினால் உண்மையான வடிவத்தைப் பெறுவது எது?

(iii) உள்ளத்திலே தெளிவு இருக்கும்போது உணர்ச்சி வெளிப்பாட்டில் உண்டாகும் சாதகமான அம்சம் யாது?

(iv) உள்ளத்திலே தெளிவு இல்லாதபோது உணர்ச்சி வெளிப்பாட்டில் உண்டாகும் பாதகங்கள் யாவை?

(v) கவிதை பற்றிய கம்பனுடைய கொள்கை யாது?

(vi) அந்தக் கொள்கை பாரதியாருக்கும் உடன்பாடானதா? அது எவ்வாறு புலனாகின்றது?

(12 புள்ளிகள்)

(13 + 12= 25 புள்ளிகள்)

(ஆ)

i) எளிமையும் உணர்ச்சி வேகமும்

ii) பாரத நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்ற உணர்ச்சி

iii) உணர்ச்சி தெள்ளிய, எளிய முறையிலே அனைவருக்கும் புரியும்படியாக வெளிப்படுகின்றது.

iv) வார்த்தைகள் நேராக வராமை

அவை பின்னிக்கொள்கின்றமை

(விளங்கிக்கொள்வது கடினமாக உள்ளமை - மனப்பாடம் செய்த நிகண்டுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளமை)

v) கவிதையிலே ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டும்.

vi) ஆம்

இதுவே நியாயமான கொள்கை என்று பாரதியார் கூறுவதன் மூலம்

(02 × 06 = 12 புள்ளிகள்)

[13 + 12 = 25 புள்ளிகள்]

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) செயற்கை நுண்ணறிவும் அதன் விளைவுகளும்

(ஆ) ஒழுக்கக கல்வியின் முக்கியத்துவம்

(இ) கிராமிய வாழ்வும் நாட்டார் பாடல்களும்

(ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு: சாதக பாதகங்கள்

(உ) 'நினைவு நல்லது வேண்டும்' (25 புள்ளிகள்)

3.

(அ) செயற்கை நுண்ணறிவும் அதன் விளைவுகளும்

- அறிமுகம்
  - தலைப்புப் பற்றிய விளக்கம்
  - மனிதனின் பகுத்தறிதல், முடிவெடுத்தல் மற்றும் கற்றல் போன்ற திறன்களை கணினிகளுக்கு அளித்து, அதனூடாக மனிதனை இயங்கச் செய்யும் தொழினுட்பமே செயற்கை நுண்ணறிவாகும்.
- சாதகமான விளைவுகள்
  - மருத்துவம், கல்வி, வணிகம், பாதுகாப்பு, போக்குவரத்து போன்ற பல துறைகளில் முன்னேற்றம் ஏற்படும்.
  - வேகமும் துல்லியமும் உடையது.
  - மாணவர்களுக்குத் தனிப்பட்ட கற்றல் முறைகளை வழங்குகின்றது.
  - சுரங்கத் தொழில், விண்வெளிப் பயணம், படைத்துறைச் செயற்பாடுகள் முதலிய ஆபத்தான நிலைகளில் மனிதர்களுக்குப் பதிலாகச் செயற்படுகிறது.
  - நோய்களை விரைவாகக் கண்டறிய உதவுவதோடு, அறுவை சிகிச்சையில் ரோபோக்கள் போன்றவற்றின் உதவியையும் வழங்குகின்றது.
- பாதகமான விளைவுகள்
  - இயந்திரங்கள், மனித வேலையில் ஈடுபடுவதால் வேலைவாய்ப்புக் குறைவு.
  - தகவல்கள் கசியும் அபாயம் தோன்ற வாய்ப்புண்டு.
  - மனித சிந்தனைத்திறன் குறையும் அபாயம் உண்டு.
  - தவறான தகவல் உருவாக்கம் ஏற்படின் சமூகத்தில் குழப்பநிலை தோன்றும்.
  - இளந் தலைமுறையினரைத் தவறான வழியில் இட்டுச்செல்லக் காரணமாக அமைகின்றது.

(ஆ) ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம்

- தலைப்புத் தொடர்பான அறிமுகம்
  - மனிதன் மனிதனாக வாழ்வதற்கென வழிகாட்டுவது ஒழுக்கக் கல்வி ஆகும்.
- ஒழுக்கக் கல்வியின் நோக்கமும் பயனும்
  - தனிமனித விழுமியத்தைப் போதித்தல்
  - சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வழிகாட்டல்

- சமூக நல்லிணக்கத்தைப் பேணுதல்

- ஒழுக்கக் கல்வியைப் போதிக்கும் வழிமுறைகள்
  - வீடு, கல்வி நிறுவனங்கள், சமூக, சமயம்சார் நிறுவனங்கள், சான்றோர்களின் வாழ்க்கை நெறி, இலக்கியங்கள்

- ஒழுக்கக் கல்வியைப் போதிக்காவிடின் ஏற்படும் தாக்கங்கள்
  - சமூக வன்முறை
  - தனிமனித ஒழுக்கப் பிரச்சினைகள்
  - சமூகப் பிறழ்வுகள்
  - சட்டவிரோதமான செயல்கள்
  - அமைதியின்மை

(இ) கிராமிய வாழ்வும் நாட்டார் பாடல்களும்

- தலைப்புப் பற்றிய அறிமுகம்
  கிராமியப் பாடல் கிராமிய மக்களுடைய வாழ்க்கை வட்டத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற வாய்மொழி இலக்கியமாகும்.

- வாழ்க்கை வட்டச் செயற்பாடுகளில் நாட்டார் பாடல்களின் செல்வாக்கு
  - பிறப்பு
  - விளையாட்டு
  - பூப்பு
  - காதல்
  - திருமணம்
  - சடங்குகள்
  - மரணம்

- கிராம மக்களின் தொழில் முறைகளைப் பிரதிபலிக்கும் நாட்டார் பாடல்கள்
  - வேளாண்மை
  - மீன்பிடி
  - பெருந்தோட்டத் தொழில்
  - விழாக்களும் சடங்குகளும்

- பிற கலைகளில் நாட்டார் பாடல்களின் தாக்கம்

(ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு: சாதக பாதகங்கள்

- தலைப்புப் பற்றிய அறிமுகம்

- சாதகங்கள்
  - நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல், அந்நியசெலாவணி அதிகரித்தல்
  - அதிக வருமானம் பெறும் வாய்ப்பு
  - குடும்பத்தின் பொருளாதார நிலை உயர்தல்
  - வெவ்வேறு நாடுகளின் கலாசாரம், மொழி, அனுபவம் கிடைக்கும் வாய்ப்பு

- வாழ்க்கைத் தரம் மேம்படுதல்
- எதிர்காலத் தொழில் முன்னேற்றத்திற்கு சர்வதேச அனுபவம் கிடைத்தல்

- பாதகங்கள்
  - குடும்பத்தைப் பிரிந்து தொலைதூரத்தில் வாழும் நிலை
  - மொழி மற்றும் கலாசாரச் சிக்கல்கள்
  - அதிக வேலைச் சுமையும் மன அழுத்தமும் ஏற்படல்
  - பிள்ளைகள் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படல்
  - நாட்டின் திறமையான மனிதவள வெளியேற்றம்
  - உழைப்புச் சுரண்டப்படும் நிலை ஏற்படல்
  - சட்டரீதியான பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளுதல்

(ஊ) 'நினைவு நல்லது வேண்டும்'

- தலைப்புத் தொடர்பான அறிமுகம்
  - வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியத்தை அடையவேண்டுமானால் நினைவு நல்லதாக அமைய வேண்டும்
  - நல்ல நினைவுகளே வாழ்வை நெறிப்படுத்துபவை
- நல்ல நினைவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் வழிமுறைகள்
  - (நல்ல நூல்களை வாசித்தல்) அறிவினால் ஒழுக்கம் கிடைக்கிறது. ஒழுக்கத்தினால் அன்பு தோன்றுகிறது. அன்பினால் கருணை பிறக்கிறது.
  - இறை வழிபாட்டில் ஈடுபடுதல்
  - தியானப் பயிற்சியில் ஈடுபடுதல்
  - உடற்பயிற்சியில் ஈடுபடுதல்
  - உத்தமர்களோடு உரையாடுதல்
- தீய நினைவுகளுக்குள் இழுத்துச் செல்பவை
  - நவீன ஊடகங்கள்
  - புதிய கலாசார மோகம்
  - வாழ்வியல் முறைமைகள்
- நல்ல நினைவு வராதவிடத்து ஏற்படும் இழிவு நிலை
  - பூந்தோட்டமாக அமைய வேண்டிய வாழ்க்கை போராட்டமாக மாறுகிறது.

[12 + 08 + 05 = 25 புள்ளிகள்]

பகுதி II

4. (அ) எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் அடங்கும் புறத்திணை நூல்களைக் குறிப்பிடுக.

(ஆ) சங்ககாலப் புறத்திணை இலக்கிய மரபின் பொதுப் பண்புகளைத் தெளிவுறுத்துக.

(இ) பதிற்றுப்பத்து நூல் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

4.

(அ)

- எட்டுத்தொகை
  - புறநானூறு
  - பதிற்றுப்பத்து
  - பரிபாடல்
- பத்துப்பாட்டு
  - திருமுருகாற்றுப்படை
  - பொருநராற்றுப்படை
  - பெரும்பாணாற்றுப்படை
  - சிறுபாணாற்றுப்படை
  - மதுரைக்காஞ்சி
  - மலைபடுகடாம்
  - நெடுநல்வாடை (அகம் / புறம்)

எட்டுத்தொகை பத்துப்பாட்டு முழுமையாக

(05 புள்ளிகள்)

(4+1)

ஆ)

- சுட்டியொருவர் பெயர் கொள்ளும் காதற் பாக்களையும் போர் முதலிய பிற ஒழுக்கங்களைக் கூறும் பாக்களையும் புறத்திணையுள் அடக்குவர்.
- போரும் வீரமும் சிறப்பாக எடுத்துப் பாடப்பட்டுள்ளன.
- புறத்திணைச் செய்யுட்கள் பொரும்பாலானவை பாடாண்திணையில் பாடப்படுவன.
- அறிவுரை கூறி வாழ்த்தலும் இதில் அடங்கும்.
- கடவுள் வாழ்த்து, அறுமுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து முதலியனவும் இதன் பாற்படும்.
- காஞ்சித்திணை — ஆராயுபதில் ஏதேனும் 4 எழுதினால் ஓகேயும்.

(05 புள்ளிகள்)

(இ)

- சேர மன்னர் பதின்மர்மீது பத்துப் பத்துப் பாட்டுக்களாகப் பாடப்பட்ட நூறு செய்யுட்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு, பாட்டின் பெயர் என்பன குறிக்கப்பட்டுள்ளது.

- இறுதியில் உள்ள பதிகம் பாட்டுடைத் தலைவர் பற்றிய தகவல்களையும் பாடியோர் பெற்ற பரிசுகளையும் குறிப்பதாகும்.
- இப்பதிகங்கள் ஆசிரியப்பாவாகத் தொடங்கி கட்டுரை நடையாக முடிகின்றன.
- இந்நூலின் முதல் பத்தும், பத்தாம் பத்தும் இக்காலத்தில் கிடைக்கவில்லை.
- இந்நூல் எக்காலத்துக்கு உரியது என்ற சர்ச்சை நிலவுகின்றது.

(05 புள்ளிகள்)

[05 × 03 = 15 புள்ளிகள்]

5. (அ) ஐரோப்பியர் ஆட்சிக் காலப் பகுதியில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்த பின்னணியை விளக்குக.

(ஆ) அக்காலப் பகுதியிலே தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு நல்கியவர்கள் குறித்துக் கருத்துரைக்குக.

(இ) இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளில் சிறுகதை எனும் உரைநடை இலக்கியம் தோன்றி வளர்ந்தவாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

5.

(அ)

- அச்சு இயந்திரத்தின் வருகை
  - ஏடுகளிலிருந்த நூல்கள் அச்சுப்பதிப்புப் பெற்றமை
  - இலக்கியம் சமூகப் பரவலாக்கம் பெற்றமை
- மதப்பிரசாரம்
  - மதத்தைப் பரப்புவதற்காக சாதாரண மக்களின் பேச்சு வழக்கில் இருந்த சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்திப் பிரசாரத்தை மேற்கொண்டமை
- ஆங்கிலக் கல்வியின் அறிமுகம்
  - படித்த மத்தியதர வர்க்கத்தின் தோற்றமும் ஆக்க இலக்கியங்கள் தமிழுக்கு அறிமுகமாகியதும்
- பத்திரிகைகளின் தோற்றம்
  - பலரும் படித்து விளங்கிக்கொள்ளும் வகையில் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டிய தேவை எழுந்தமை

(05 புள்ளிகள்)

(ஆ)

- வீரமாமுனிவர்
  - பரமார்த்த குருகதை
  - வேதியர் ஒழுக்கம்
  - வேத விளக்கம்
  - வாமன்கதை
- தத்துவ போதக சுவாமிகள்
  - தத்துவக் கண்ணாடி

ஆத்ம நிர்ணயம்
இயேசுநாதர் சரித்திரம்
கடவுள் நிர்ணயம்

- ஆறுமுக நாவலர்

நவீன உரைநடையின் தந்தை
வசனநடை கைவந்த வல்லாளர்
நூல்கள்
பெரியபுராண வசனம்
திருவிளையாடற் புராண வசனம்
கோயிற் புராண உரை
கட்டுரை : யாழ்ப்பாண சமயநிலை

- சிவஞான முனிவர்

திராவிட மாபாடியம் என்னும் சிவஞானபோத பேருரை

- ஏனையோர்

தாண்டவராய முதலியார்	- பஞ்சதந்திரக் கதைகள்
வேதநாயகம்பிள்ளை	- பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி
ராஜமையர்	- கமலாம்பாள் சரித்திரம்
சபாபதி நாவலர்	- திராவிடப் பிரகாசிகை
சூரிய நாராயண சாஸ்திரியார்	- மதிவாணன்
திரிகோணமலை சரவணப்பிள்ளை	- மோகனாங்கி

(05 புள்ளிகள்)

(இ)

- ஆரம்ப காலச் சிறுகதைகள் / தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்

வீரமாமுனிவர் - பரமார்த்த குருகதை
வ.வே.சு.ஐயர் - குளத்தங்கரை அரசமரம்
பாரதியார் - ஆறிலொரு பங்கு
அ.மாதவையா – குசிகர் குட்டிக்கதைகள்

- கல்கி (ரா.கிருஷ்ணமூர்த்தி)

சாரதையின் தந்திரம்
ஒற்றை ரோஜா
வீணை பவானி
கணையாழியின் கனவு

- மணிக்கொடி கால எழுத்தாளர்கள்

  புதுமைப்பித்தன் - சாபவிமோஷனம், அகல்யை, துன்பக்கேணி, கபாடபுரம்

  பி.எஸ்.ராமையா - மலரும் மணமும், நட்சத்திரக் குழந்தைகள்

  மௌனி - அழியாச் சுடர்

  ராஜாஜி – வண்ணான் சின்னச்சாமி

  கு.ப.ராஜகோபாலன் - புனர்ஜென்மம், கனகாம்பரம், காஞ்சனமாலை

  க.நா.சுப்பிரமணியம் - கட்டபொம்மு, தோட்டியை மணந்த அரசகுமாரி

(05 புள்ளிகள்)

[05 × 03 = 15 புள்ளிகள்]

6. (அ) ஈழத்தில் எழுந்த மரபுவழிப் புராணங்கள் பற்றிக் கருத்துரைக்குக.

   (ஆ) ஈழத்தில் எழுந்த மரபுவழித் தூது இலக்கியங்கள் குறித்து விவரிக்குக.

   (இ) ஈழத்தில் புராணம், தூது என்னும் இலக்கிய வடிவங்கள் நவீன நோக்கில் கையாளப்பட்டவாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

6.

(அ)

- தலம் சார்ந்தவை

  தட்சிண கைலாச புராணம் - பண்டிதராசன்

  திருக்கரைசைப் புராணம் - ஆசிரியர் பெயர் அறியுமாறில்லை

  வியாக்கிரபாத புராணம் - வைத்தியநாத தம்பிரான்

  புலியூர்ப் புராணம் - சிவானந்த ஐயர்

- விரத மகிமை பாடுபவை

  சிவராத்திரி புராணம் - வரதபண்டிதர்

  ஏகாதசி புராணம் - வரதபண்டிதர்

  பிள்ளையார் கதை - வரத பண்டிதர்

- கிறிஸ்தவ மதம் சார்ந்தவை

  யோசப்பு புராணம் - கூழங்கைத்தம்பிரான்

  ஞானானந்த புராணம் - தொன்பிலிப்பு

  திருவாக்குப் புராணம் - கனகசபைப் புலவர்

- இஸ்லாம் மதம் சார்ந்தவை

  முகையித்தீன் புராணம் - பதுறுதீன் புலவர்

(05 புள்ளிகள்)

(ஆ)

- குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது - வரதபண்டிதர்
- பஞ்ச வன்னத்தூது - இணுவில் சின்னத்தம்பிப் புலவர்

(05 புள்ளிகள்)

(இ)

- புராணம் என்ற பழைய வடிவத்தில் புதிய பொருளை அமைத்துப் பாடியமை
- சமகால சமுதாயப் போக்கு, சீரழிவுகள் பாடப்பட்டுள்ளமை
- இலக்கியங்கள்

கனகிபுராணம்

- சுப்பையனார் பாடினார்
- வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலின் தாசிகளில் ஒருத்தியான கனகி என்பவளை பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது

தால புராணம்

- அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர் பாடினார்
- பனையின் பயன்பாட்டினை பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.

கோட்டுப் புராணம்

- வே.இராமலிங்கம் பாடினார்.
- நீதித்தலத்தில் (கோட்டில்) வாதி, பிரதிவாதிகளுக்கு ஏற்படும் பண நஷ்டம், துன்பங்கள், அவலங்கள் எடுத்துப்பாடப்பட்டுள்ளன.

தத்தைவிடுதூது

- தி.த.சரவணமுத்துப்பிள்ளை பாடினார்.
- பெண்விடுதலைக் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(05 புள்ளிகள்)

[05 × 03 = 15 புள்ளிகள்]

7. பின்வருவோரில் யாரேனும் மூவர் ஈழத்திலே தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

(அ) ஆறுமுக நாவலர்

(ஆ) சித்திலெப்பை

(இ) விபுலாநந்தர்

(ஈ) தனிநாயக அடிகள்

(உ) குறிஞ்சித் தென்னவன் (15 புள்ளிகள்)

7.

அ) ஆறுமுகநாவலர் (1822- 1879)

- பங்களித்த துறைகள்
  - உரைநடை வளர்ச்சி
  - பழந்தமிழ் நூற்பதிப்பு
- செய்யுள் நூல்களுக்கு உரை எழுதியமை
  - திருமுருகாற்றுப்படை
  - கோயிற் புராணம்
  - ஆத்திசூடி
  - நல்வழி
  - நன்னெறி
  - கொன்றை வேந்தன்
- செய்யுள் நூல்களை வசனநடை வடிவில் தந்தமை
  - பெரியபுராண வசனம்
  - கந்தபுராண வசனம்
  - திருவிளையாடற்புராண வசனம்
- பாடநூலாக்கம்
  - பாலபாடங்கள்
  - சைவ வினாவிடை
  - இலக்கணச் சுருக்கம்
  - இலக்கண வினாவிடை

ஆ) சித்திலெப்பை (1838 – 1898)

- இஸ்லாமிய மறுமலர்ச்சியின் முன்னோடி
- ஈழத்து முதல் நாவல் - அசன்பேயின் கதைகள்
- பத்திரிகைத்துறை – முஸ்லிம்நேசன், ஞானதீபம்
- நூல்கள்

  உமர்பாஷாவின் யுத்த சரிதம்

  இலங்கைச் சோனகர் சரிதம்

  துருக்கி- கிரேக்க சரிதம்

இ) விபுலாநந்தர் (1892 -1947)

- முத்தமிழ் அறிஞர்
- ஆய்வுகள் : யாழ்நூல், மதங்கசூளாமணி முதலியன
- மொழிபெயர்ப்பு
- செய்யுளாக்கம்
- கலைச்சொல்லாக்கம்
- இதழியல்
- கற்பித்தற் பணி (முதற்றமிழ்ப் பேராசிரியர் - அண்ணாமலை, இலங்கைப் பல்கலைக்கழகம்)

ஈ) தனிநாயக அடிகள் (1913 – 1980)

- Tamil Culture (தமிழ்ப் பண்பாடு) என்னும் ஆய்விதழ்
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நிறுவியமை
- ஆராய்ச்சிக் கட்டுரைகள்
- கற்பித்தற் பணி (இலங்கை, மலேசியப் பல்கலைக்கழகம்)
- நூல்கள் : தமிழ்த்தூது, பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி

உ) குறிஞ்சித் தென்னவன் (1934 - 1998)

- கவிஞர்
- மலைய மக்களின் வாழ்க்கைப் போராட்டங்கள், உரிமைகளை மையமாகக் கொண்டு கவிதை படைத்தவர்.
- படைப்பு : குறிஞ்சித் தென்னவன் கவிதைகள்
  குறிஞ்சித் தென்னவன் கவிச்சரங்கள்

[05 × 03 = 15 புள்ளிகள்]

8. (அ) (i) 'நில்' என்பதை நிலைமொழியாகக் கொண்டு அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(ii) 'வை' என்ற சொல் முதல்வினையாகவும் துணைவினையாகவும் வருவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(iii) 'அழை', 'அளை' ஆகிய சொற்களை அவற்றின் பொருள் விளங்கத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

(iv) 'உம்' எனும் இடைச்சொல் ஐயம், எச்சம் ஆகிய பொருள்களைத் தரும் வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

(v) பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வழுவை இனங்கண்டு, வழுவற்ற வகையில் அவ்வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கம்பகா மாவட்டம் முதலாம் இடத்தையும் இரண்டாம் இடத்தை களுத்துறை மாவட்டமும் பெற்றுக்கொண்டன.

(10 புள்ளிகள்)

8.

(அ)

(i) அகப்புணர்ச்சி - நில் + ற் +ஆன் = நின்றான்

புறப்புணர்ச்சி - நில் + என்றான் = நில்லென்றான்

(ii) வை - முதல் வினையாக – தலையில் கை வைத்தான்

வை - துணை வினையாக – சொல்லிவைத்தான்

(iii) அழை - ஆசிரியர் என்னை அழைத்தார்

அளை - அவன் விரல்களால் மண்ணை அளைந்தான்

அல்லது

சிங்கம் அளையில் (குகை) வசித்தது.

(iv) உம் - ஐயப்பொருள் - மழை பெய்தாலும் பெய்யும்

உம் - எச்சப் பொருள் - குமரனும் வந்தான்

(v) தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கம்பகா மாவட்டம் முதலிடத்தையும் களுத்துறை மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. / தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை கம்பகா மாவட்டமும் இரண்டாம் இடத்தை களுத்துறை மாவட்டமும் பெற்றக்கொண்டன.

(02 × 05 = 10 புள்ளிகள்)

Past Papers Wiki

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி, சிறுகுறிப்பு வரைக.

(i) தன்வினை - பிறவினை

(ii) தனிவினை - கூட்டுவினை

(iii) கூட்டுப்பெயர் - ஆக்கப்பெயர்

(05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

(ஆ)

(i) தன்வினை - பிறவினை

தன்வினை

- வினையின் பயன் கருத்தாவை / எழுவாயைச் சேருமாயின் தன்வினை எனப்படும்
- வினையை நிகழ்த்துபவன் தானே வினையின் பயனை அடைதல்
  உதாரணம்: கவிதா இசையை இரசித்தாள்

பிறவினை

- வினையின் பயன் கருத்தாவை அன்றி பிறிதொன்றைச் சேருமாயின் பிறவினை எனப்படும்.
- வினை நிகழ்த்துபவன் தானே வினையின் பயனை அடையாமல் பிறிதொன்று அதன் பயனை அடைதல்
  உதாரணம்: கீதா மரங்களுக்கு நீரை ஊற்றினாள்
- 'வி', 'பி' முதலிய விகுதிகள் பெற்றுவரும் வினைகள் பிறவினைகள் ஆகும் என மரபிலக்கண நூல்கள் கூறும்

(ii) தனிவினை - கூட்டுவினை

தனிவினை

- பகாப்பதமாக அமையும் தனி வினையடிகளைக் கொண்ட வினைச் சொற்கள் தனிவினையாகும்.
  உதாரணம் : வா, போ, வந்தேன், போகிறேன்

கூட்டுவினை

- பகுபதமாய் அமையும் வினையடிகள் கூட்டுவினை எனப்படும்
- கூட்டுவினைகள் மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன.

வினை +வினை	- கண்டு	+ பிடி	=	கண்டுபிடி
பெயர் + வினை	- உத்தரவு	+ இடு	=	உத்தரவிடு
இடை +வினை	– பின்	+ பற்று	=	பின்பற்று

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iii) கூட்டுப்பெயர் - ஆக்கப்பெயர்

கூட்டுப்பெயர்

- இரண்டு அல்லது பல சொற்கள் இணைந்து உருவாகும் பெயர்ச்சொற்கள் கூட்டுப்பெயர் எனப்படும்
- கூட்டுப் பெயரின் அமைப்பு

பெயர் + பெயர் : வான் + ஒலி = வானொலி

வினை + பெயர் : சுடு + சோறு = சுடுசோறு

இடை + பெயர் : மேல் +மாடி = மேல்மாடி

ஆக்கப் பெயர்

- பெயர் அல்லது வினைச் சொற்களுடன் ஆக்கப்பெயர் விகுதிகளை இணைத்து ஆக்கப்படுவது
- ஆக்கப் பெயர் அமைப்பு

பெயர் + விகுதி = ஆக்கப்பெயர்

எழுத்து+ ஆளன் = எழுத்தாளன்

வினை + விகுதி = ஆக்கப்பெயர்

பொறு + மை = பொறுமை

(05 புள்ளிகள்)

[10 + 05 = 15 புள்ளிகள்]

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank